2

உயர்கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

கடிதம் எண்.10936/ஜே2/2010–1, நாள் 2.7.2010

அனுப்புநர்
திரு க.கணேசன்.இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

26895

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.

மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்
5 - ஜூலை 2010
சென்னை-600 025

ஐயா,

பொருள்: உயர்கல்வி – 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்கள் – கல்விக் கட்டணச் சலுகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது – சுயநிதி தொழிற்கல்லூரிகளுக்கு தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணம் – தொடர்பாக.

பார்வை:
1) தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழுவின் கடிதம் எண்.COF/FEES/26/2010, நாள் 1.3.2010.

2) அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 16.4.2010.

--------

பார்வை இரண்டில் காணும் அரசாணையில் 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல், பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவிகளின் கல்விக் கட்டணம் (Tuition fee)க்கான செலவை மட்டுமே அரசு ஏற்கும் என ஆணையிடப்பட்டது. அவ்வாணையில் கல்விக் கட்டணம் என்பது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொழிற்கல்லூரிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும், சுயநிதி தொழிற்கல்லூரிகளுக்கு தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணத்தையும் மற்றும் பல்கலைக்கழகங்கள் நடத்தும் பாடப்பிரிவுகளுக்கு அப்பல்கலைக்கழகங்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தையும் குறிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

...2

2. பார்வை ஒன்றில் காணும் கடிதத்தில், தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு பின்வருமாறு கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்துள்ளது:-

| வ. எண். | பாடப்பிரிவுகள் | நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| 1. | பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். | 20,000/- |
| 2. | எம்.பி.பி.எஸ். (அனைத்து சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், ஐ.ஆர்.ட்டி பெருந்துறை மருத்துவக் கல்லூரி நீங்கலாக) | 1,25,000/- |
| 3. | பி.டி.எஸ். | 40,000/- |
| 4. | பி.எஸ்.சி (நர்சிங்) | 20,000/- |
| 5. | பி.பார்மசி | 18,000/- |
| 6. | பி.ப்பி.ட்டி. | 18,000/- |
| 7. | பி.ஒ.ட்டி. | 18,000/- |
| 8. | சித்தா / ஆயுர்வேதம் | 20,000/- |
| 9. | ஹோமியோபதி | 20,000/- |
| 10. | இயற்கை மருத்துவம் | 15,000/- |

3. எனவே, இதுகுறித்து கலந்தாய்வில் கலந்து கொள்ளும் முதல் பட்டதாரி குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தெரியப்படுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை-25.

அனைத்து அரசு, அரசுதவி மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25 வழியாக)

அனைத்து மருத்துவ கல்லூரிகள் (மருத்துவக் கல்லூரி இயக்குநர், சென்னை-10 வழியாக)

இ.கோ / உதிரி.